**செய்தி வெளியீடு எண்: 396** **நாள்: 21.06.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கின் பயிற்சி ஓடுதளப் பாதையின் அருகில் 13 கோடியே 58 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 1 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 14.5.2013 அன்று சட்டப்பேரவையில் விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதன்படி, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கின் பயிற்சி ஓடுதளப் பாதையின் அருகில், 13 கோடியே 58 லட்சத்து 13 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தை விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில், நீர் வடிகட்டும் நிலையம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடைமாற்றும் அறை, நிலையான வெப்பநிலையினை பராமரிக்கும் உபகரணங்களுடன் கூடிய மாற்றுத்

திறனாளிகளுக்கான பிரத்யேக நீர் சிகிச்சை அளிக்கும் உள்ளரங்க நீச்சல் குளம், நீச்சல் குளத்தின் முதல் தளத்தில் 30 மீட்டர் x 15 மீட்டர் அளவில் மரத்தாலான தரைதளம் கண்ணாடி பலகைகள் பொருத்திய மேற்கூரை, பார்வையாளர் இருக்கைகள், உடைமாற்றும் அறையுடன் கூடிய ஸ்குவாஷ் ஆடுகளங்கள், உலக அளவிலான வாகையர் இறகுப்பந்து போட்டிகள் நடத்தும் வகையில் 35 மீட்டர் x 21.50 மீட்டர் அளவில் குளிரூட்டி வசதி மற்றும் ஒளிரும் மின்விளக்கு வசதிகளுடன் கூடிய நான்கு ஆடுகளங்கள் கொண்ட இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம், இருக்கை வசதிகளுடன் கூடிய 30 மீட்டர் x 19 மீட்டர் அளவில் இரண்டு கையுந்துபந்து ஆடுகளங்கள், இரண்டு கூடைப்பந்து ஆடுகளங்கள் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டரங்கில், 1 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பார்வையாளர் இருக்கைகள், மரத்தாலான தரைத்தளம், ஒளிமின் விளக்கு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கடந்த 2013–ஆம் ஆண்டு, தென் கொரியா நாட்டின், பியோங்சாங் நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உலக குளிர்கால போட்டிகளில், ஆடவர் தரை ஹாக்கி (Floor Hockey) போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணிக்காக விளையாடிய மதுரையைச் சேர்ந்த திரு.பாலுபாண்டியன் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணா ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி. சத்யநாராயணன் மற்றும் திரு.வி.என். விருகை ரவி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.6.2018**